DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No.DVC.No.6/2023**

**prosecution witness: PW-1**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | மிஸ்டிக்கா | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

<u>22.08.2024</u>

<u>குறுக்கு விசாரணை:-</u>

நான் தங்கச்சிமடத்தில் குடியிருநது வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் 4 வது எதிர்மனுதாரும், 7 வது எதிர்மனுதாரரும் கணவன், மனைவி ஆவார்கள் அவர்கள் தங்கச்சிமடத்தில் குடியிருந்து வருகீறார்கள் என்றால் சரிதான். அதேபோல் 5 வது எதிர்மனுதாரரும், 8 வது எதிர்மனுதாரரும் கணவன், மனைவி ஆவார்கள் என்றால் சரிதான். அவர்கள் பாம்பனில் தனியாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் இல்லை அவர்கள் அம்மா வீட்டில் தான் தற்போது வரை குடியிருந்து வருகிறார்கள்.

2. 5, 8 வது எதிர்மனுதாரர்கள் எந்த வீட்டில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் கூரை வீட்டில் குடியிருக்கிறார்கள். 1, 2, 3 எதிர்மனுதாரர்கள் வீடானது சென்ட்ரிங் போட்ட வீடு என்றால் சரிதான். சென்ட்ரிங் போட்ட வீட்டின் நீள, அகலம் தெரியுமா என்றால் தெரியாது. நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் திருமணம் முடிந்த பின்னர் சென்ரிங் வீட்டில் தான்குடியிருந்து வந்தேன் என்றால் சரிதான். அந்த வீடானது மீனவர்களுக்காக அரசாங்கத்தால் கட்டிக்கொடுக்கப்பட்ட சுனாமி குடியிருப்பு என்றால் சரிதான். அந்த வீடு என் மாமனார் ராயப்பன் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான்.

/12/

3.நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தின் விபரங்கள் நான் தான் சொன்னேன். நிரூபண வாக்குமூலம் 7 வது பாராவில் திருமணம் ஆன ஒரு வாரத்திலேயே நகைகளை கேட்டு அடித்து துன்புறுத்தி, நகைகள் கொடுக்கவில்லை என்றால் வெட்டி கொன்றுவிடுவதாக சொன்னதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. அதேபோல் மனுவில் யார் சொன்னார்கள் என்று மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் எனது கணவரும், எனது மாமானாரும் சொன்னார்கள்.

4. காவல்நிலையத்தில் AWPS யார் மீது புகார் கொடுத்தேன் என்றால் எனது கணவர், மாமனார், மாமியார் மீது கொடுத்தேன். நான் தாக்கல் செய்துள்ள காவல்நிலைய மனு ரசீது 1வது எதிர்மனுதாரர் 2வது எதிர்மனுதாரரான மாமியாரின் பேச்சை கேட்டு கொண்டு அசிங்கமாக பேசி துன்புறுத்துவதாக அதனால் நடவடிக்கை எடுக்க கோரி புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரின் பெயரில் எனது கணவர், மாமானார், மாமியாா மட்டும் தான் காவல்நிலையத்தில் ஆஜர் ஆனார்கள் என்றால் சரிதான். 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் காவல்நிலையத்தில் ஆஜராகி விளக்கம் கொடுத்ததால் நான் கொடுத்த புகார் பொய் புகாா என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல என்னை தனியாக வீடு பிடித்து வைக்க சொல்லி சொன்னார்கள். நான் தனியாக வீடு எடுத்து பாம்பன் சந்திரகிரி தெருவில் வைத்து இருந்தார்கள் என்றால் இல்லை. நானும், எனது கணவரும் பாம்பன் சந்திரகிரி தெருவில் ஊராட்சி மன்ற தலைவர் பேட்ரிக் அவர்களின் அக்கா வீடான சூசை சந்தியா வீட்டில் அக்டோபர் முதல் ஏப்ரல் வரை குடியிருந்தோம் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மனுவில் வரதட்சணை கேட்டதாகவும், ரூ.2,00,000/- கேட்டதாகவும் கூறியதற்கு புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அதற்கான மனு ரசீது இந்த வழக்கில் தாக்கல செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த மனு சம்பந்தமாக மாவட்ட சமூக நலத்துறையில் இருந்து அறிவிப்பு வந்ததா என்றால் இல்லை. AWPS கூப்பிட்டார்கள் நான் நீதிமன்றத்தில் வழககு நிலுவையில் இருப்பதாக சொன்னேன். இந்த மனுவை தாக்கல் செய்தபின்பு தான் மனுவை கொடுததுள்ளேன் என்றால சரிதான். எனது கணவர் என்ன தொழில செய்கிறார் என்றால் பாம்பனில் கடலுக்கு செல்கிறார். பாம்பனில் கடல் நாட்கள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் தான் கரையில் இருப்பார்கள் மற்ற நாட்கள் கடலில் இருப்பார்கள். நான் இருந்த எனது மாமனார் வீட்டில் ஒரு ஹால், ஒரு ரூம், ஒரு கிச்சன் என்றால் சரிதான். அது மொத்தமே 17 அடி அகலம் 21 அடி நீளம் உள்ள இடத்தில் கட்டப்பட்டது என்றால் சரிதான். நான் மனுவில் சொல்லியுள்ளது போல் 1ம் எதிர்மனுதாரருக்கு 2ம் எதிர்மனுதாரர் கொடுத்ததாக சொல்லும் தூக்க மாத்திரை என்ன நிறுவனத்தினுடைய மாத்திரை என்று மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான் அவரது அக்கா நர்சாக இருப்பதால் மாத்திரை கொடுத்தார்கள். அந்த மாத்திரை எதற்காக, என்ன வைத்தியத்திற்காக மாத்திரை சாப்பிட்டார் என்றால் தடுமலுக்காக என்று சொன்னார்கள் ஆனால் அவருக்கு தடுமல் இல்லை. எனது வீட்டுக்காரர் 5ம் வகுப்பு வரை படித்துள்ளார். மனுவில் சமாதானம் பேசும்போது வேறு யார் கலந்து கொண்டார்கள் என்றால் பெரிய ஆட்கள் எல்லோரும கலந்து கொண்டார்கள்.

மீனவசங்கத்தலைவர் சேசு, கலைக்கூடம் சகாயம் ஆகியோர்கள் கலந்து கொண்டார்கள் என்றால் சரிதான். அவர்கள் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ சொல்லி நான் மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் எனது கணவரை செல்போன் மூலம் பலமுறை தொடர்பு கொண்டு எடுக்கவில்லை, காலை பிளாக் செய்துவிட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு பலமுறை தொடர்பு கொண்டதற்கு, எனது காலை பிளாக் செய்தற்கோ செல்போன் கம்பெனியில் இருந்து ஆவணம் பெற்று தாக்கல் செய்தேனா என்றால் இல்லை அவர் என் நம்பரை பிளாக் செய்யவில்லை அந்த போனை அவர் உபயோகிக்கவில்லை.

தங்கச்சிமடத்திற்கும், பாம்பனுக்கும் இடையே 6 கி.மீ துூரம் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் யாருடைய போட்டில் கடலுக்கு செல்கிறார் என்றால் திருமணத்தின் போதுசொந்தமாக போட் வைத்திருப்பதாக சொன்னார்கள். அந்த போட்டின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவருக்கோ, எனது மாமனாருக்கோ சொந்தமாக விசைப்படகு இல்லை என்றால சரியல்ல. என் சித்தப்பா சக்கரியாசுக்கு 1ம் எதிர்மனுதாரருக்கு போட் இருக்கா இல்லையா என்ற விபரம் தெரியுமா என்றால் சரிதான். சக்கரியாஸ் மீன் வியாபாரி என்றால் சரிதான். அவர் பாம்பன், இராமேஸ்வரத்தில் ஐஸ் மீன் வியாபாரம் செய்து வருகிறார் என்றால் இல்லை மண்டபத்தில் செய்து வருகிறார். எனது திருமணத்தை சக்கரியாஸ் தான் நடத்தி வைத்தார் என்றால் சரிதான்.

நான் என் கணவருடன் மட்டும் பாம்பன் சந்திரகிரி தெருவில் குடியிருந்து வந்தேன் என்றால் இல்லை. அந்த வீட்டில் இருநது 1ம் எதிர்மனுதாரர் கடலுக்கு சென்று கரை திரும்பவதற்குள் திருமணத்தின் போது அணிவித்த நகைகள் மற்றும் சீதனப்பொருட்களை எடுத்துக்கொண்டு நான் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால சரியல்ல. அந்த விபரங்கள் அந்த வீட்டின் உரிமையாளர் சூசை சந்தியாவிற்கு தெரியும் என்றால சரியல்ல. திருமணம் முடிந்த 10 நாளில் என் கணவருக்கு விசைப்படகு மோதி காலில் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். எவ்வளவு நாள் சிகிச்சையில் இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரருக்கு சுடுதண்ணீ பட்டு இடுப்பிற்கு கீழே காயம் ஏற்பட்டதால் அவருக்கு நான் மனைவியாக இருந்து செய்யவேண்டிய கடமையை செய்யாமல், எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் பெயரில் எந்த சொத்துக்களும் இல்லை என்றால் அவர் பெயரில் 5 செண்ட் இடம் வாங்கியிருப்பதாக எனது மாமியார், அவரது அக்கா சொன்னார். அப்படி எந்தவொரு இடமும் 1ம் எதிர்மனுதாரருக்கு கிடையாது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தான் தேவையில்லாத பிரச்சனைக்கு சண்டைபோட்டு கொண்டு பிரச்சனை செய்து பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டதால் எனக்கு ஜீவனாம்சம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான்தான் எதிர்மனுதாரர்களுக்கு தொடர்ந்து மனஉளைச்சலையும், மனவேதனையும் கொடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் யாரும், எனக்கு மன உளைச்சலோ, மன வேதனையோ கொடுக்காததால் எதிர்மனுதாரர்கள் யாரும் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் இல்லை என்றால் சரியல்ல.

/14/

எதிர்மனுதாரர்களை அலைகழிக்க வேண்டும் என்று பொய்யாக மனு கொடுத்துள்ளேன் அதனால் என் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

ஒம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.